1996 ஆகஸ்ட் 6]

திரு. பசும்பொன் தா. கிருட்டிணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத் துறையின் தகவல் மையங்கள் இப்போது தமிழ்நாட்டில் எங்கெங்கு இருக்கின்றன? இது போன்ற பண்பாட்டு மையங்களை வெளிநாடுகளிலே துவக்குவதற்கு உத்தேசம் உண்டா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் இருக்கும் அந்தப் பிரிவு ஒவ்வொன்றும் தகவல் மையங்கள்தான். என்றாலும்கூட, மாநில ஆளுநர் அவர்களுடைய தலைமையில் தென்னக கலைப் பண்பாட்டு மையம் ஒன்று தஞ்சையில் இயங்கிக்கொண்டிருக்கிறது. அதன் சார்பில் தமிழகம் முழுவதும் பிற மாநிலத்தாருடைய கலை நிகழ்ச்சிகளை நாம் நடத்தவும், நம்முடைய மாநிலத்தினுடைய கலை நிகழ்ச்சிகளை பிற மாநிலத்தார் நடத்தவுமான பரிமாற்ற ஏற்பாடுகள் தொடர்ந்து செய்யப்பட்டு வருகின்றன. அந்த அடிப்படையில் இந்த ஆய்வுகள் முழுமையாக மேற்கொள்ளப்பட்டு வரும் காலத்தில் ஒவ்வொரு மாவட்டத்திலும் அதற்குரிய சிறப்பு சேர்க்கப்படும். அதே நேரத்திலே, வெளிநாட்டிலும் இதுபோன்ற அமைப்புகள் இயங்குகிறபோது செய்திகளைப் பரிமாறிக் கொள்ள தேவையான மையங்களை அமைப்பதற்கான முயற்சிகளை அரசு ஆய்வு செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 97, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. சுப்பராயன், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

97--

தொழிலாளர் வைப்பு நிதி

318*--திரு. கே. சுப்பராயன் :**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) தமிழ்நாட்டில் உள்ள நிர்வாகங்களால் கட்டப்படாமல் நிலுவையில் உள்ள தொழிலாளர் வைப்பு நிதி எவ்வளவு பாக்கி உள்ளது?

(ஆ) அதை வசூல் செய்ய அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

[1996 ஆகஸ்ட் 6

மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தமிழ்நாட்டில் நிர்வாகங்களால் கட்டப்படாமல் 31-3-1996 முடிய நிலுவையில் உள்ள தொழிலாளர் வைப்பு நிதி ரூபாய் 1669.97 இலட்சங்களாகும்.

(ஆ) 1952-ம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்புநிதி மற்றும் பல்வகைச் சட்டம் பிரிவு **8(B)** *மற்றும்* **8(F)**-ன் *கீழ் நிலுவையை வசூல் செய்ய நிர்வாகம் முடுக்கி விடப்பட்டுள்ளது.*

திரு. கே. சுப்பராயன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிர்வாகம் கட்டாமல் விடுவதை ஒரு தண்டனைக்குரிய குற்றமாக மாற்ற பொருத்தமான சட்டத் திருத்தத்தைக் கொண்டுவருமாறு மாநில அரசு மத்திய அரசைக் கோருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இண்டியன் பீனல் கோட் குற்றவியல் சட்டத்தின்படி 406, 409 பிரிவின்கீழும், அதைப்போலவே தி எம்ப்ளாயீஸ் பிராவிடெண்ட் ஃபண்டு மற்றும் மிசலேனியஸ் ஆக்ட் 1952 பிரிவு 14, 14பி ஆகியவைகளின்கீழும் தண்டனைக்குரியதாக்கவும், பி.எஃப்-ஐ ஒழுங்காக நிர்வாகம் கட்டவில்லை என்று சொன்னால் அதற்கான இழப்புத் தொகையையும் விதிக்கின்ற உரிமையும் ஏற்கெனவே உள்ள சட்டத்தின்கீழ் இருக்கின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. டி. மணி.

திரு. டி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வைப்பு நிதியைப் பொருத்து, பெரும்பகுதி முதலாளிகள் அங்கே பணியாற்றுகின்ற தொழிலாளர்களிடம் தொகையை வசூல் செய்துவிட்டு அரசுக்குக் கட்டுவதில்லை. இது ஒரு பக்கம். இன்னொரு பக்கத்திலே இந்தத் துறைக்கு அவர்கள் பணத்தைக் கட்டியபிறகும்கூட அதற்கான ரசீதுகள் காலாகாலத்தில் தொழிலாளர்கள் கைக்கு வருவதில்லை. இந்த இரண்டையும் தவிர்ப்பதற்குரிய அளவில் பொதுவாக இந்த வைப்பு நிதியை வசூல் செய்து அரசுக்குக் கட்டாமல் இருக்கின்ற அந்த ஸ்தாபனங்களுடைய லைசன்ஸை கேன்சல் செய்யக்கூடிய நடவடிக்கையை அரசு மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

1996 ஆகஸ்ட் 6]

மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வைப்பு நிதி பொறுத்தவரையில் நிர்வாகம் செயல்படுவதில் தவறு இருக்குமானால், ரசீதுகள் சரியாக கொடுக்கப்படவில்லை என்று சொன்னால், உறுப்பினர் சுட்டிக்காட்டினால் அரசு உரிய நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. சுப்பராயன்.

திரு. கே. சுப்பராயன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு தொழிற்சாலைகளில் பி.எஃப். கட்டவேண்டிய அவசியம் இருந்தும் கட்டாமல் தப்பித்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படி தப்பிக்கக்கூடிய தொழிற்சாலைகளைக் கட்ட வைப்பதற்குரிய பொருத்தமான வழிமுறைகளை உருவாக்குவதற்கு மாநில அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே உரிய நடைமுறை விதிகளின்படி, சட்டங்களின்படி அந்த நிர்வாகம் வைப்பு நிதியை முறையாக வைக்கவேண்டும் என்று நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. அதிலே தவறு இருக்குமேயானால் அரசு உரிய நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 98, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கமணி, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

98--

குற்றவியல் நீதி மன்றம்

*699--**திரு. கே. தங்கமணி :**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

மானாமதுரையில் குற்றவியல் நீதிமன்றம் ஒன்று அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மானாமதுரையில் குற்றவியல் நீதிமன்றம் ஒன்று அமைத்திடும் செயற்குறிப்பு நிதி நெருக்கடியின் காரணமாக தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது.